முருகப்பெருமான் துணை

**மகான் கவுபாலச்சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.03.2022, சனிக்கிழமை

1. அவனி காக்கும் மாதவசியே
ஆறுமுகனாய் வந்த ஞானியே
அவதாரம் எடுத்து வழிநடத்தும்
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே பிலவ சால் திங்கள்
குறையிலா எழுநான்கு திகதி காரிவாரம்
(பிலவ வருடம் மாசி மாதம் 28ம் நாள், 12.03.2022 சனிக்கிழமை)
அறிவிப்பேன் கவுபாலச்சித்தர் யானும்
அருளாசிதனை உலகநலம்பெற உரைப்பேன்
3. உரைக்கவே சமதானம் மிக்க
உயர்ஞானி காட்டும் சைவநெறி
மறைபோற்றும் ஞானநெறியாக
மக்களை காக்கும் நெறியாக இருக்க
4. இருக்கவே கலிகால மக்கள்
எங்கும் ஞானம் தேடி அலையா
கருத்தாக தமிழக மண்ணில்
கருணைமிகுந்த எல்லை துறையூரை
5. துறையூரை அனுகி சடுதி
தேசிகன் வாழ் பிரணவக்குடிலில்
குறைவின்றி தொடர்பை கூட்டி
குருவரங்கன் ஆசிதனை பெற்று
6. பெற்றுமே அரங்கன் ஆசிதந்த
பிரணவ சக்தி கொண்ட அருளமுதை
ஆற்றல் பரவ உண்டு இனிதே
அரங்கா முருகா என வேண்டி
7. வேண்டியே தொடர நலம்
வினை போக்கும் தருமத்தில்
தொண்டும் பொருளுதவியும்
தொடர்ந்து உலகோர் செய்து
8. செய்துமே ஞானிகள் திருவடி
சேவையாகப் பற்றி வர
மெய் ஞானச் சக்தி கூடி
மேலவர்கள்அருளாசி படவே
9. ஆசிபட வினைகள் கடந்து
அரங்கன் தேடலின் வழி
ஆசியினால் ஞானிகளாவர்
ஆறுமுகன் ஞான ஆட்சிக் காலம்

10. காலம் அமைக்கும் சக்தியாக
கருணை மிக்க ஞானப்படைகள் ஆக
காலம் கனிந்து எங்கும் மாற்றம்
கட்டாயம் அரங்கஞானி வழிகாட்டலில்

11. வழிகாட்டலில் உலகம் தேறும்
வாய்மை தரும நேர்மைகூடி
அழியாமை எளிதில் யாவர்க்கும் சித்திக்கும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–